


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.1.2026) தலைமைச் செயலகத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை சார்பில் 2024–2025ஆம் ஆண்டில் மாநில அளவில் பட்டு மற்றும் பருத்தி இரகங்களில் சிறந்த நெசவாளர் விருதிற்கு தெரிவு செய்யப்பட்ட 8 விருதாளர்களுக்கு 20 இலட்சம் ரூபாயும், சிறந்த வடிவமைப்பாளர்களுக்கான விருதிற்கு தெரிவு செய்யப்பட்ட 2 விருதாளர்களுக்கு 1.50 இலட்சம் ரூபாயும், சிறந்த இளம் வடிவமைப்பாளர்கள் விருதிற்கு தெரிவு செய்யப்பட்ட 3 விருதாளர்களுக்கு 2.25 இலட்சம் ரூபாயும், என மொத்தம் 13 விருதாளர்களுக்கு 23.75 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில், கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் ஆர்.காந்தி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர் திருமதி.வே.அமுதவல்லி, கைத்தறித் துறை இயக்குநர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சிறந்த கைத்தறி நெசவாளர் – சிறந்த வடிவமைப்பாளர் – சிறந்த இளம் வடிவமைப்பாளர் விருதுகளுக்குத் தேர்வான

# 13 விருதாளர்களுக்கு ரூ.23.75 இலட்சத்திற்கான காசோலைகள் - பாராட்டுச் சான்றிதழ்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்பித்தார்!

**சென்னை, ஜன. 4-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.1.2026) தலைமைச் செயலகத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை சார்பில் 2024-2025ஆம் ஆண்டில் மாநில அளவில் பட்டு மற்றும் பருத்தி இரகங்களில் சிறந்த நெசவாளர் விருதிற்கு தெரிவு செய்யப்பட்ட 8 விருதாளர் களுக்கு 20 இலட்சம் ரூபாயும், சிறந்த வடிவமைப்பாளர்களுக்கான விருதிற்கு தெரிவு செய்யப்பட்ட 2 விருதாளர்களுக்கு 1.50 இலட்சம் ரூபாயும், சிறந்த இளம் வடிவமைப்பாளர்கள் விருதிற்கு தெரிவு செய்யப்பட்ட 3 விருதாளர் களுக்கு 2.25 இலட்சம் ரூபாயும், என மொத்தம் 13 விருதாளர்களுக்கு 23.75 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார்.**

தமிழ்நாட்டின் கைத்தறி தொழிலானது தொன்மையும், வரலாற்று பாரம்பரிய சிறப்பும், நுணுக்கமான பல்வேறு வேலைப்பாடுகளையும் கொண்டதாகும். கைத்தறி தொழிலில் தமிழ்நாடானது பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்குவதுடன், உலகளவில் பிரசித்தி பெற்ற இரகங்களான காஞ்சிபுரம் பட்டு, ஆரணி பட்டு, திருபுவனம் பட்டு மற்றும் பவானி ஜமக்காளம் போன்ற இரகங்களை உற்பத்தி செய்து வருகின்றது. தமிழ்நாட்டில் 1,115 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு அரசின் சீரிய திட்டங் களின் வாயிலாக தொடர் வேலைவாய்ப்பும், உத்திரவாதமான கூலியும் உறுதி செய்யப்பட்டு வருவதுடன், நெசவாளர் நலத்திட்டங்கள் வாயிலாக பல்வேறு நலத்திட்டங்களும் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

**சிறந்த நெசவாளர் விருது!**

தமிழ்நாடு அரசால் கைத்தறி நெசவாளர்களுக்கென செயல்படுத்தப்பட்டு வரும் ஏராளமான திட்டங்களில் ஒரு பகுதியாக புதுமையான மற்றும் கண்கவர் வடிவமைப்புகளை புகுத்தி தற்போதைய சந்தை தேவைக்கேற்ப பட்டு மற்றும் பருத்தி கைத்தறி இரகங்களை உற்பத்தி செய்து கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்து வரும் கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்கும் வகையில் “சிறந்த நெசவாளர் விருது” ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில், 2024-2025ஆம் ஆண்டுக்கான மாநில அளவில் பட்டு இரகத்தில் சிறந்த நெசவாளர் விருதுக்கான முதல் பரிசிற்கான 5 இலட்சம் ரூபாய் திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர் எம்.ஆர்.கோபிநாதன் அவர்களுக்கும், இரண்டாம் பரிசிற்கான 3 இலட்சம் ரூபாய் தஞ்சாவூர் மாவட்டம், திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர் திருமதி.வி.ராஜலட்சுமி மற்றும் காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர் திருமதி பி.கௌரி ஆகிய இருவருக்கும் தலா 1.50 இலட்சம் ரூபாயும், மூன்றாம் பரிசிற்கான 2 இலட்சம் ரூபாய் தஞ்சாவூர் மாவட்டம், திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர் திருமதி. ஜி.மாலா மற்றும் திருப்பூர் மாவட்டம், தந்தை பெரியார் பட்டு மற்றும் பருத்தி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர் எஸ்.ராஜவேல் ஆகிய இருவருக்கும் தலா 1 இலட்சம் ரூபாயும்;

2024-2025ஆம் ஆண்டுக்கான மாநில அளவில் பருத்தி இரகத்தில் சிறந்த நெசவாளர் விருதுக்கான முதல் பரிசிற்கான 5 இலட்சம் ரூபாய் இராமநாதபுரம் மாவட்டம், மகாகவி பாரதியார் பருத்தி மற்றும் பட்டு தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர் ஆர்.பாஸ்கரன் அவர்களுக்கும், இரண்டாம் பரிசிற்கான 3 இலட்சம் ரூபாய் கோயம்புத்தூர் மாவட்டம், வதம்பச்சேரி ஸ்ரீ நடராஜர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர் எஸ்.ராஜன் அவர்களுக்கும், மூன்றாம் பரிசிற்கான 2 இலட்சம் ரூபாய் திருப்பூர் மாவட்டம், கோவில் வழி பருத்தி மற்றும் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர் பி.கந்தசாமி அவர்களுக்கும், என மொத்தம் 8 விருதாளர்களுக்கு 20 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை முதலமைச்சர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

**சிறந்த வடிமைப்பாளர் விருது!**

ஜவுளித்துறையில் அதிகரித்துவரும் போட்டியினை சமாளிப்பதற்கும் மற்றும் மாறிவரும் நவீன ரசனைக்கேற்ப புதிய வடிவமைப்புகளை உருவாக்குவதற்காக அரசால் சிறந்த வடிவமைப்பாளர் விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், 2024-2025ஆம் ஆண்டுக்கான சிறந்த வடிமைப்பாளர் விருதுக்கான முதல் பரிசிற்கான 1 இலட்சம் ரூபாய் ஈரோடு மாவட்டம், சென்னிமலை தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க வடிவமைப்பாளர் அப்புசாமி கிருஷ்ணன் அவர்களுக்கும், மூன்றாம் பரிசிற்கான 50 ஆயிரம் ரூபாய் காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர் வி.கண்ணன் அவர்களுக்கும், என மொத்தம் 2 விருதாளர்களுக்கு 1.50 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை முதலமைச்சர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

**சிறந்த இளம் வடிவமைப்பாளர் விருது!**

ஜவுளித் தொழிலின் நுட்பங்கள், வடிவமைப்பு மற்றும் காலமாற்றத்திற்கேற்ற வண்ணங்களின் போக்கினை கணித்தல் ஆகியவற்றில் பங்களிப்பு திறன் கொண்ட வடிவமைப்பாளர்களை கண்டறிந்து ஊக்குவிக்கும் பொருட்டும், அவற்றை தற்கால சந்தை மற்றும் ஆடை அலங்கார நிலவரங்களுக் கேற்ப கைத்தறி துணிகளாக உற்பத்தி செய்யும் பொருட்டும் தமிழ்நாடு அரசால் மாநில அளவிலான “சிறந்த இளம் வடிவமைப்பாளர் விருது” 2022-23ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், 2024-2025ஆம் ஆண்டுக்கான சிறந்த இளம் வடிவமைப்பாளர் விருதுக்கான முதல் பரிசிற்கான 1 இலட்சம் ரூபாய் ஈரோடு மாவட்டம், சத்திய மங்கலம், பண்ணாரியம்மன் தொழில் நுட்பக் கல்லூரியில் இளங்கலை ஜவுளி தொழில்நுட்ப பொறியியல் துறையில் நான்காமாண்டு பயிலும் மாணவர் எஸ்.எஸ். விமல் அவர்களுக்கும், இரண்டாம் பரிசிற்கான 75 ஆயிரம் ரூபாய் திருச்சி ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரியில் நவீன ஆடை வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பத் துறையில் மூன்றாமாண்டு பயிலும் மாணவி செல்வி ஆர்.மதுமிதா அவர்களுக்கும், மூன்றாம் பரிசிற்கான 50 ஆயிரம் ரூபாய் திருச்செங்கோடு, கே.எஸ்.ரங்கசாமி தொழில்நூட்பக் கல்லூரியில் பொறியியல் இளங்கலை ஜவுளி தொழில்நுட்ப துறையில் இரண்டாமாண்டு பயிலும் மாணவி செல்வி. பி.டி. மோனிகா அவர்களுக்கும், என மொத்தம் 3 விருதாளர்களுக்கு 2.25 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை முதலமைச்சர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில், கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் ஆர்.காந்தி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர் திருமதி.வே.அமுதவல்லி, கைத்தறித் துறை இயக்குநர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வரின் அயராத உழைப்பு, தொலைநோக்குப் பார்வை, கடுமையான அர்ப்பணிப்பால்

# இந்தியாவிலேயே இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தை எட்டிய முதல் மாநிலமாக தமிழ்நாடு!


## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜன.4–

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அயராத உழைப்பு, தொலைநோக்குப் பார்வை, கடுமையான அர்ப்பணிப்பால் இந்தியாவிலேயே இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தை எட்டிய முதல் மாநிலமாக தமிழ்நாடு உருவெடுத்திருப்பதாக ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:–

இந்தியாவில், உத்தரப்பிரதேசம் மாநிலத்தைவிட பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு சிறந்து விளங்குவதாக புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. உத்தரப்பிரதேசத்தின் கடன் தொகையைவிட தமிழ்நாட்டின் கடன் தொகை அதிகமாக இருப்பதாக ஒரு தரப்பினர் முன்வைக்கும் வாதம் ஏற்புடையது அல்ல என புள்ளி விவரங்கள் கூறுகின்றன.


தினகரன்

ஜனவரி 3, 2026 சனிக்கிழமை

அனைத்திலும் நம்பர் 1

இந்தியாவில், உத்தரபிரதேசம் மாநிலத்தை விட பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு சிறந்து விளங்குவதாக புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. உத்தரபிரதேசத்தின் கடன் தொகையை விட தமிழ்நாட்டின் கடன் தொகை அதிகமாக இருப்பதாக ஒரு தரப்பினர் முன்வைக்கும் வாதம் ஏற்புடையது அல்ல என புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

ஒரு மாநிலத்தின் கடனை, வெறும் தொகையின் அடிப்படையில் கணக்கிடாமல், மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிட்டு கணக்கிட வேண்டும் என பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். 2025-26ம் நிதியாண்டில் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த கடன், மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 26.1% ஆக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இதுவே, 2024-25 நிதியாண்டில் 26.4% ஆகவும், 2023-24 நிதியாண்டில் 26.6% ஆகவும் இருந்துள்ளது. இந்த தரவுகள் தமிழ்நாட்டின் கடன் விகிதம், கொரோனா காலக்கட்டத்திற்கு பிறகு படிப்படியாக குறைந்து வருவதை உணர்த்துகின்றன.

ஒரு மாநிலத்தின் கடனை, வெறும் தொகையின் அடிப்படையில் கணக்கிடாமல், மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிட்டு கணக்கிட வேண்டும் என பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். 2025–26ம் நிதியாண்டில் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த கடன், மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 26.1% ஆக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இதுவே, 2024–25 நிதியாண்டில் 26.4% ஆகவும், 2023–24 நிதியாண்டில் 26.6% ஆகவும் இருந்துள்ளது.

இந்த தரவுகள் தமிழ்நாட்டின் கடன் விகிதம், கொரோனா காலக்கட்டத்திற்கு பிறகு படிப்படியாக குறைந்து வருவதை உணர்த்துகின்றன. ஆனால், உத்தரப்பிரதேசத்தின் ஒட்டுமொத்த கடன், அம்மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 29.4% ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ.35.7 லட்சம் கோடி ஆக இருக்கும் நிலையில், தமிழ்நாட்டைவிட மூன்று மடங்கு அதிக மக்கள் தொகையை கொண்ட உத்தரப்பிரதேசத்தின் உள்நாட்டு உற்பத்தி ரூ.30.8 லட்சம் கோடி ஆக மட்டுமே உள்ளது.

இந்த விகிதத்தின் அடிப்படையில் பார்த்தால், உத்தரப்பிரதேசத்தின் கடன் விகிதம் தமிழ்நாட்டின் கடன் விகிதத்தைவிட அதிகம். தமிழ்நாட்டின் நிதிப்பற்றாக்குறை, கடந்த நிதியாண்டைவிட குறைந்து, 2025–26ம் நிதியாண்டில் 3% ஆக இருக்கும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். நடப்பு நிதியாண்டில் 11.19% வளர்ச்சியை எட்டி, இந்தியாவிலேயே இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தை எட்டிய முதல் மாநிலமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் சராசரி உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7% ஆக இருந்துள்ளது. கடன் அதிகரித்தாலும், தமிழ்நாட்டின் பொருளாதாரம் கடனில் மூழ்காமல் விரிவடைந்துள்ளது. இது, தரவுகளின் மூலம் உறுதியாகிறது. உத்தரப்பிரதேசத்தின் தனிநபர் சராசரி உற்பத்தி மதிப்பு ரூ.1.07 லட்சம் ஆக உள்ள நிலையில், தமிழ்நாட்டின் மதிப்பு மூன்று மடங்கு அதிகரித்து ரூ.3.53 லட்சம் ஆக உள்ளது.

தமிழ்நாட்டைவிட குறைவாக கடன் பெற்றிருப்பதாக கூறப்படும் உத்தரப்பிரதேசம், பொருளாதார வளர்ச்சி குறியீடுகளில் தமிழ்நாட்டைவிட மிகவும் பின்தங்கியிருப்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. தமிழ்நாடு உலகத்தர கட்டமைப்பு, தொழில் வளர்ச்சிக்கென அடுத்தகட்ட வளர்ச்சிக்காக பெறும் கடனைவிட, அதிக தொகையை உத்தரபிரதேசம் அடிப்படை வசதிகளுக்காக பெற்று வருகிறது. அதாவது, தமிழ்நாடு தனது கடனை உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு மற்றும் தொழில் வளர்ச்சிக்காக பயன்படுத்தும் வேளையில், உத்தரப்பிரதேசம் மாநிலம் இன்னும் அடிப்படை வசதிகளுக்காகவே கடன் பெறும் நிலையில் உள்ளது.

அனைத்து குறியீடுகளிலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்வதை பொருளாதார புள்ளிவிவரங்கள் உறுதிப்படுத்துகின்றன. இது, பா.ஜ.க. ஆளும் மாநில முதல்வர்களை புருவம் உயர்த்த வைத்துள்ளது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் அயராத உழைப்பு, தொலைநோக்கு பார்வை, தெளிவான முடிவு, கடுமையான அர்ப்பணிப்பு போன்றவை தமிழ்நாட்டை இன்னும் முன்னேற்ற பாதைக்கு கொண்டுசெல்லும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. வெல்க, தமிழ்நாடு.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சிறப்பு தீவிர வாக்காளர் திருத்த (எஸ்ஐஆர்) பட்டியல் சரிபார்த்தல்

# 2026 ஜனவரி 3, 4 ஆகிய தேதிகளில் நடைபெறும் சிறப்பு முகாம் குறித்து மாவட்ட, மாநகரச் செயலாளர்கள்/பொறுப்பாளர்கள் மற்றும் தொகுதிப் பார்வையாளர்கள் கவனத்திற்கு...

## தலைமைக் கழக அறிவிப்பு!

1-1-2026 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) முடிந்து இந்திய தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ள வரைவு வாக்காளர் பட்டியலை 12.12.2025 அன்று வெளியிட்டு, “தகுதியுள்ள வாக்காளர்கள் தங்களின் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வசதியாக, அனைத்து வாக்குச்சாவடிகளிலும் டிசம்பர் 27, 28, மற்றும் ஜனவரி 3, 4 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.” என தேர்தல் ஆணையம் அறிவித்ததைத் தொடர்ந்து,

வருகிற 2026 ஜனவரி 3,(சனி) 4 (ஞாயிறு) ஆகிய நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1-1-2026 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களைச் சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களைப் பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2026ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் - வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் - புதிதாகக் குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும், புதிய வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும்; தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின்படி, சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊர்க்கிளை, வார்டு/வட்டக் கழகச் செயலாளர் - நிர்வாகிகள் மற்றும் வாக்குச் சாவடி நிலைய முகவர்கள் (BLA-2) - வாக்குச்சாவடி நிலையக் குழு உறுப்பினர்கள் (BLC) ஆகியோர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதோடு, தொகுதிப் பார்வையாளர்கள் வருகிற ஜனவரி 3, 4 ஆகிய இரு நாட்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள சட்டமன்றத் தொகுதி முழுவதும் உள்ள வாக்குச் சாவடிகள் தோறும் நேரடியாகச் சென்று ஆய்வு செய்து, வாக்காளர் சேர்த்தல் - நீக்கல் - திருத்தல் ஆகிய பணிகளை அந்தந்த வாக்குச் சாவடி நிலைய முகவர்கள் (BLA-2) மற்றும் வாக்குச் சாவடி உறுப்பினர்கள் முழு ஈடுபாட்டுடன் பணியாற்றுகிறார்கள் என்பதை ஆய்வு செய்திட வேண்டுமெனவும்,

‘ஒவ்வொரு தொகுதிப் பார்வையாளரும், தேர்தல் ஆணையத்தால் 2025 டிசம்பர் 27,28, 2026 ஜனவரி 3,4 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்ட முகாம்களையும் சேர்த்து, இதுவரை தத்தமது தொகுதியில் சேர்த்தல் - நீக்கல் - திருத்தம் செய்த வாக்காளர்களின் எண்ணிக்கை விவரங்களையும், **குறிப்பாக ஓரணியில் தமிழ்நாடு’ பட்டியலில் உள்ளோர், பாகம் வாரியாக நீக்கப்பட்டோர் எத்தனை பேர்? அவர்களில் புதியதாக படிவம்-6 கொடுத்து சேர்க்கப்பட்டோர் எத்தனை பேர்? சேர்க்க இயலாதவர்கள் எத்தனை பேர்? அதற்கான காரணம் என்ன? ஆவணம் சமர்ப்பிக்கப்பட வேண்டியவர்கள் எத்தனை பேர்? ஆகிய விவரங்கள் அடங்கிய அறிக்கையையும் வருகிற 2026 ஜனவரி 6ஆம் தேதிக்குள் தலைமைக் கழகத்திற்குள் அனுப்பி வைத்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

மாவட்ட, மாநகரக் கழகச் செயலாளர்கள்/ பொறுப்பாளர்கள் மற்றும் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர்கள் சிறப்பு அக்கறையோடு கழக அமைப்புகளை இப்பணியில் ஈடுபடுத்திடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 02.01.2026

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி நேற்று (03.01.2026) சென்னை, எழும்பூர், கோ–ஆப்டெக்ஸ் தில்லையாடி வள்ளியம்மை விற்பனை நிலையத்தில் பராம்பரிய சேலையின் அழகையும், நவீன உடை வசதியையும் ஒருங்கிணைக்கும் வகையில் ”Ready to Wear Sarees” இரகத்தினை அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்வின் போது கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, அரசு செயலாளர் திருமதி வே.அமுதவல்லி, கைத்தறித் துறை இயக்குநர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், கோ–ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திருமதி கவிதா ராமு மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.